# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற் பெட்டி இலக்கம்: 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ வைகாசி 1977 — இதழ் - 17




## நெல்லிக்கனியின் அருமை

நெல்லிக்கனியின் அருமையை அறிந்தவர் ஔவையார். பெருமலைவிடரகத் தருமிசைகொண்ட சிறியிலை நெல்லித் தீங்கனி என்று அதனைப் போற்றுவர். விடரகம் என்பது மலைப்பிளவு. முன்னொரு நாள் ஔவையாரின் உள்ளத்தில், அதிகமான் தானுண்ணுமல் ஔவையாருக்குத் தந்த நெல்லிக்கனி மிகப் பெரிய கொடையாய் இருந்தது. அது தாய்க்கொடை. தாய்மார் தாமுண்ணுமல் பிள்ளைகளுக்கு ஊட்டல் அருட்கொடையே அன்றி வேறல்ல.

ஔவையார் பசியால் வருந்தியபோது புள்வேளூர் வேளாளனுய பூதனென்பான் வரகரிசிச் சோறும் வழுதுளங்காய் வாட்டும் முரமுரெனவே புளித்த மோரும் கலந்து கொடுத்துப் பசிதீர்த்தவன். அந்த எளிய உணவைப் பெரிய அவிப்பாகமாகப் போற்றிய

உயிர்ச்சத்து நிரம்பிய அந்த நெல்லிக்கனி ஔவையாரை நீண்டகாலம் வாழவைத்தது. நத்தத்தனுர் என்னும் புலவர் நெல்லிக் கனியை அமிழ்துவிளை தீங்கனி என்றே புகழ்கின்ருர். வேருெருவர் அதனை நெல்லியமுது என்பர்.

நெல்லிக்கனியைத் தின்ற ஔவையார் தமக்கு அதனைத் தந்த அதிகனை அதிகமாகப் போற்றினுர்.


பூங்கமல வாவி சூழ் புள் வேளூர்ப் பூதனையும்
ஆங்குவரு பாற்பெண்ணை ஆற்றினையும் — ஈங்கே
மறப்பித்தாய் வாழதிகா வன்கூற்றின் நாவை
அறுப்பித்தாய் ஆமலகம் தந்து.

நெல்லிக்கு ஆமலகம், அத்தகோரம், அந்தகோரம், அம்லம், ஆமரிகம், ஆலகம், இந்துள், இயமேதை, இரசத்தாளி, கோங்கம், கோரங்கம், தாத்திரிபலம், மாகத்தி முதலிய பெயர்களுண்டு.

### நெல்லி அமுதம்

நெல்லி அமுதம் என்று சங்ககாலப் புலவர்களால் புகழப்பெற்ற நெல்லி சித்தர்களாலும் போற்றப்பெற்றது. அரிநெல்லி பெருநெல்லி என்னும் இரு வகை நெல்லிகளுள், பெரு நெல்லியே பெரிதும் சிறந்தது. அது வாதம், பித்தம் கபம் என்னும் மூன்று தோஷங்களையும் அதனதன் அளவில் நிறுத்தும் ஆற்றல் வாய்ந்தது. ஆதலால் அதற்குத் திரிதோஷ சமனம் என்னும் பெயர் வைத்திய நூல்களில் வழங்குகிறது. திரிதோஷசமனி என்னும் மூலிகைகளும் உள்ளன. திரிதோஷசமனம் உடம்பில் உண்டாளுல் அதைப்போன்ற இன்பம் வேறில்லை.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)



மில்க்வைற்தொழிலதிபர் வீரசைவப் பெரியாரைக்கௌரவித்தபோது நியூ லீலா அச்சக அதிபரும் அருகே நின்ற காட்சி.

★ உண்மை உழைப்பு உயர்வைத் தரும் ★

உ

## கடவுள் வணக்கம்

### திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருப்பழனம் — திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

ஆடினா ரொருவர்போலு மலர்கமழ் குழலினாளைக்
கூடினா ரொருவர்போலுங் குளிர்புனல் வளைந்ததிங்கள்
சூடினா ரொருவர்போலுந் தூயநன் மறைகளான்கும்
பாடினா ரொருவர்போலும் பழனத்தெம் பரமனாரே.

திருப்பழனம் என்னுந் திருத்தலத்திலே திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள எம் முதல்வனார் திருக்கூத்தாடியருளியவரும், மலர்களின் நறுமணம் வீசும் கூந்தலையுடைய உமையம்மையாரைக் கூடியவரும், கங்கை வெண்ணீரையும் வளைந்த பிறையையும் சூடியருளியவரும், தூயனவும் நல்லனவுமான இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என வகுக்கப்பட்ட நால் வேதங்களையும் பாடியருளியவரான ஒருவர் போலும். ★

---




### கொடுங்கோன்மை

வளைந்த கோல்போன்ற அரசாங்க நீதியின் தன்மை

கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.

முறைதவறி நடக்கும் அரசாங்கம் பொருளையும் குடிமக்களையும் இழந்துவிடும்.

**The tyrannical sway of the sceptre.**

*The government who without reflection, rules unjustly will lose its wealth and its subjects.*

---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### நெல்லிக்கனி .....

நெல்லிக்காயைப் பகற்பொழுதில் உண்ணலே முறை. அதனால் பைத்தியத்தன்மை, கபநோய், பீநிசம், வாய் நீர்ச்சுரப்பு, வாந்தி, மலபந்தம் முதலியன நீங்கும். அதன் புளிப்பால் வாயுவும், துவர்ப்பால் கபமும் நீங்கும் என்பர். நீரிழிவு நோயாளருக்கு நெல்லிக்காய் நிகரில்லாத நன்மையைத் தரும்.

### நெல்லிக்காய்

முற்றிய நெல்லிக்காய் முதலில் துவர்க்கும் பின்பு புளிக்கும் முடிவில் இனிக்கும். உடல் நலத்துக்கு உவப்பான நெல்லி ஓர் அருமருந்து. நெல்லியில் கருநெல்லி என்பது தின்போரை நெடுங்காலம் வாழவைக்கும்.

சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம், யூனானி வைத்தியம் ஆகிய துறைகளில் நெல்லியின் மகத்துவங் கூறப்பட்டுள்ளது. தற்கால வைத்திய நிபுணர்கள் நெல்லிக்காயில் உயிர்ச்சத்து நிறையவுண்டு என்பர்.

நெல்லிக்காய் இரத்தத்துக்கு உரமளித்து அதனைச் சுத்திகரித்து ஊட்டமுள்ளதாக்குகிறது. இன்னும் மூளை, இருதயம், ஈரல், இரைப்பை ஆகிய உள்ளுறுப்புக்களுக்கு நெல்லிக்காய் அதிக நன்மை செய்கிறது. நெல்லிக்காய் பித்தத்தைப் போக்குவதில் நிகரில்லாதது. அது வாதத்தையும் கபத்தையும் மேக நோயையும் நீக்கும் என்பர்.

நெல்லிக்காய் கிடைக்கும்போது அதைப் பழப் பாகாகவும், ஊறுகாயாகவும், வற்றலாகவும் பாகஞ்செய்து வைத்துக்கொள்ளலாம். நெல்லிக்காயை இரவில் தின்னலாகாது. காய்ச்சல் உள்ளவர்களும் கருப்பந் தரித்தவர்களும் தின்னக் கூடாது.

### நீண்டகால உபயோகம்

நெல்லிக்காயை நன்றாகக் கழுவித் துடைத்து வெள்ளிக் கம்பியால் சிறு துவாரங்கள் உண்டாக்கி வெல்லப்பாகில் இட்டு வைத்தால் நீண்டகாலம் உபயோகிக்கலாம்.

★ ★ ★

உரலிலிட்டுப் பூணில்லாத உலக்கையால் துவைத்துக் கொட்டை நீக்கி வெயிலில் உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்ளலாம். வேண்டும்போது சம்பலில் சேர்த்துக் கொள்ளலாம்.

★ ★ ★

உரலில் துவைத்து மஞ்சளும், உப்பும் அளவாகச் சேர்த்து மூன்று நாள் வெயிலில் வைத்துப் பின் சாடியிலோ மட்பாத்திரத்திலோ கெடாமல் வைத்துக்கொள்ளலாம். ★

— நெல்லிக்கன்று தேவை —

---


## குளங்களை அசுத்தஞ் செய்யாதீர்

யாழ் மாவட்டத்திலே வற்றிவரண்டு போன குளங்கள் பல ஆழமாக்கப் பட்டும், மண் எடுக்கப் பட்டும் இருந்ததால் மழைக் காலத்தில் நீர் நிறைந்து அழகாய் இருக்கின்றன. குளங்கள் அழகாய் இருந்தால் போதா. அவை சுத்தமாய் இருத்தல் வேண்டும். குளக்கரைகளில் மனிதர் மலசலம் கழிக்காமல் இருந்தால் அவை தூய்மையாய் இருக்கும்.

---

★ அதிக வார்த்தை அகந்தைக்குக் கால் ★

## ★ ★ பஞ்ச தந்திரம் ★ ★ ★



கல்வியும் நற்குணமும் தர்மகுணமும் இல்லாத பிள்ளைகள் இருந்தும் ஆவதொன்றும் இல்லை. பால் கொடாத எருமைகளைக் காப்பாற்றிப் பயனில்லை. குலத்தில் அயோக்கியரான பிள்ளைகள் இருத்தலாகாது.

யாதொன்று சம்பாதிப்பது அருமையோ, அதைச் சம்பாதிக்கவேண்டும். சம்பாதித்ததைக் காப்பாற்ற வேண்டும். காப்பாற்றினதை விருத்தி பண்ணவேண்டும். விருத்தி பண்ணினதைத் தானும் அனுபவித்து உத்தம பாத்திரத்திற் செலவழிக்க வேண்டும்.

புத்திசாலிகள் அருமையான காரியத்தைச் செய்வார்கள். புத்தியீனர்கள் எளிமையான காரியங்களைச் செய்வார்கள். ஏரியில் நீரைத் தேக்குதல் அரிது. அதை உடைத்து வெளியே விடுதல் எளிது.

சமர்த்தனுக்குப் பெரிய காரியம் ஏதுவும் இல்லை. பறவைகளுக்குத் தூரம் இல்லை. படித்தவர்களுக்குப் பரதேசம் என்று ஒன்றில்லை. பிரியமாகப் பேசுகிறவர்களுக்குப் பகைவர் இல்லை.

வாள் முதலிய ஆயுதங்களும், வீணை முதலிய வாத்தியங்களும், பூமியும், பெண்களும், யோக்கியர்களும், சாஸ்திரங்களும் பரிபாலனம் பண்ணுகிறவர்களாற் பிரகாசிக்கும்.

பசு, பூமி, தானியம் இவற்றின் தானத்தைக் காட்டிலும் அபயதானம் அதிகம். அசுவமேத யாகத்திலும் அபயம் கொடுத்தல் பெரிது. ★

## வழிநடத்தும் நூல்கள்

மனித வாழ்க்கை என்னும் யாத்திரையில், நூல்களும் நம்மை வழிநடத்தும் துணையாகும். எனவே நல்ல நூல்களுடன் உறவு கொள்ளாத புத்திசாலிகளைக் கண்டு நான் வருந்துகிறேன்.

( இராமகிருஷ்ண விஜயம்: மோந்தேன் )



## Divine Nectar

— Swami Sivananda —

1. Know what you seek and then seek.
2. Work is worship; dedicate it to God.
3. Renunciation will make you an Emperor.
4. Death is only a change for better state.
5. Every mistake brings its own lesson.
6. Mistake is your best teacher.
7. All sufferings contain hidden seeds of good.
8. Spiritual effort must be continuous.
9. 'Om' is your best companion in life.
10. Self realisation is for the brave and couragious.
11. If you are good the whole world is good for you.

## அச்சமும் கவலையும்

"திரட்டு"

மனிதரைக் கொல்லும் உணர்வுகளில் அச்சமும் கவலையும் முன்னணியில் நிற்பவை. அஞ்சி அஞ்சிச் சாவார் என்று பாரதியார் பாடியதில் உண்மையிருக்கிறது. அச்சமும் கவலையும் மனிதரை உருக்குலைக்கின்றன. இரண்டையும் தவிர்க்கப் பழகினால் நல்வாழ்வு வாழலாம். அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை என்பது அப்பர் சுவாமிகள் அருள்வாக்கு.

அச்சமும் கவலையும் நமது கற்பனைகளே. அவைகளால் உடம்பில் நச்சுத்தன்மை உண்டாகும். அது பெருகி உடம்பெங்கும் பரவிப் பலவித நோய்கள் உண்டாகின்றன. தலைவலி, சமியாக்குணம், கசம் முதலிய நோய்கள் உண்டாவதை எவரும் அறிவர். பச்சோந்தி என்னும் பிராணியின் நிறவேறுபாடுகள் அதன் குணவேறுபாடுகளால் உண்டாகின்றன.

அச்சம் அடையும் போது இருதயம் படபட என்று அடிக்கிறது கவலையுள்ள தாய் பாலூட்டும் போது கவனமாயிருத்தல் வேண்டும். அச்சம் கவலை உண்டான நேரத்துப் பால் நஞ்சாகிப் பிள்ளைகளைக் கொல்லும் என்பதை ஆராய்ந்து கண்டுள்ளார்கள். குழந்தைகளுக்குப் பேய்க் கதைகள் சொல்லி அஞ்சவைத்தல் ஆகாது. பேய்க்கதைகள் மனத்தில் நிலைத்து நரம்புத் தளர்ச்சியையும் உண்டாக்கும். எனவே வெறுப்பு, பகை, அச்சம், கவலை ஆகியவற்றை வளர்க்காமல் இருப்போமாக. ★

## பெண்களுக்குப் பெயரிடுதல்

பெண்களின் பெயர்கள் மங்களகரமாகச் சுருங்கிய சொற்களில் உள்ளதாக அமைதல் வேண்டும். நதிகளின் பெயர்களை இடுதல் தவிர்க்கப் படுதல் வேண்டும்.

★ அன்புள்ள இதயமே ஆலயமாகும் ★

## நாவலரும் திருவாசகமும்



பம்பாயிலுள்ள மாதுங்கா தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 24-8-1950ல் நடந்த புத்தக விமர்சனம் என்னும் தலைப்பில் திருவாசகத்தைப் பற்றிப் பேசிய கே. டி. தேவர் அவர்கள், "இப்பேர்ப்பட்ட ஒப்புயர்வற்ற திருவாசகத்தை முன்னர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்கள் மூலம் மட்டும் பதிப்பித்து வெளியிட்டனர். நாவலர் அவர்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் தம் வாழ் நாள் முழுதும் பணியாற்றியவர்கள். அதனாலன்றோ ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே என்று போற்றப்பட்டார். ★

## நாள்தோறும் நல்லன செய்வோம்

1. மாணவர்களிடையே ஒற்றுமையும் நல்லொழுக்கமும் வளர்தல் வேண்டும்
2. ஆலயப் பணிகளில் ஆர்வமும் ஈடுபாடும் உண்டாதல் வேண்டும்.
3. பொதுமக்களுக்குச் சமய அறிவை உண்டாக்க உதவி புரிதல் வேண்டும்.
4. பிடியரிசித் திட்டத்தின் மூலம் பொதுவிடங்களில் பெருஞ்சோறு வழங்குதல் வேண்டும்.
5. நாட்டில் பயன்தரும் மரங்களையும் நிழல் தரும் மரங்களையும் நாட்டி வளர்த்தல் வேண்டும்.
6. மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்கு ஆறுதல் கூறித் தேற்றுதல் வேண்டும்.

## தமிழில் வழங்கும் பாரசீகச் சொற்கள்

| | |
|---|---|
| அம்பாரம் | குமாஸ்தா |
| சர்க்கார் | சிப்பந்தி |
| சுமார் | பந்தோபஸ்து |
| பேஷ் | ரஸ்தா |
| வாபஸ் | |

## [ யாரவள்? ]

(விடை வேறிடத்தில்)

ஆதி நாளையில் அப்பனைப் பிரிந்தவள் அறிவுள்ளவர் கையில் அகப்பட்டுக் கொண்டவள். வேதனையாகவே மேனி கிழிந்தவள். வெட்டுக்கும், குத்துக்கும் கட்டுப்பட்டவள். ஏது காண் இவள் மஞ்சள் குளிக்கிறாள். ஏற்ற மையிட்டு மேனி தளுக்கிறாள். ஓதுகாண் இவள் தாசியுமல்லவே. உரைத்தவர் ஆயிரம் பொன்னும் பெறுவரே.

— ஆதாரம்: "திரட்டு"

## அர்த்தமுள்ள இந்து நாகரிகம்

இந்து நாகரிகத்துக்கு இன்று உண்டாகியிருக்கும் பெருமை சொல்லிலடங்காது. முன்னாளில் மாக்ஸ் முல்லர் போன்ற மேற்குத் தேயத்தவர் வேதங்களைப் பயின்று இந்து நாகரிகத்தை உலகத்தவருக்கு விளக்கியுள்ளனர். ஆனால் இன்றைய மேற்குத் தேயத்தவர் பலர் வாழ்ந்து காட்டுகின்றனர்.

தாராமைக்கேல் என்னும் பிரஞ்சுப் பெண்மணி தலை சிறந்த இந்துப் பெண்ணாகவே வாழ்ந்து வருகிறார். அவர் பூனா பல்கலைக் கழகத்தில் தத்துவப் பட்டம் பெற்றபின் யோகாசனத்திலும் ஈடுபாடு கொண்டு இந்து நாகரிகத்தைத் தழுவிக்கொண்டார். தம் நாட்டில் யோகத்தின் பயனையும் இந்து நாகரிகத்தின் சிறப்பையும் கூறிவருவதோடு இவற்றைப் பரப்பியும் வருகின்றார். இந்து மதத்தில் இல்லாததொன்று உலகில் வேறெங்கும் இல்லை என்று அவர் இந்து நாகரிகத்தை மதிக்கிறார், பின்பற்றி வாழ்கின்றார், வழிபாடு செய்கின்றார்.

இந்து நாகரிகம் பழமையானது, பரந்தது, பரிசுத்தமானது, பயன்தருவது. பிறப்பின் நோக்கம், வாழ்வின் நோக்கம் என்ன என்பனவாதிய கேள்விகளுக்கு இந்து நாகரிகம் விடைதருவது. இந்தியா, இந்துசமுத்திரம், இந்துநதி என்பனவெல்லாம் பிறநாட்டார் தம் வசதிக்காக வழங்கிய பெயர்கள். ஆனால் பாரதநாடு, பாரததர்மம், வைதிகநெறி, சனாதன தர்மம் முதலிய பெயர்களே பழைய திருநாமங்களாகும்.

சிவலிங்கம், முத்தலைச்சூலம், நந்தி கோயிற்கோபுரம், தெப்பக்குளம், அடர்ந்து வளர்ந்த மரம் முதலிய அடையாளங்கள் யாவும் தனித் தனியாகவும் கூட்டாகவும் இந்து நாகரிகத்தின் சின்னமாகக் கதை பேசுவன.

கொடிக் கம்பமொன்றில் பறக்கும் புடைவைத் துணியொன்று; ஒரு நாட்டின் வரலாற்றை, நாகரீகத்தை, இலக்கியத்தை, மக்கள் தொகையை, அவர்தம் பொருளாதார வளத்தை அரசியற் கோட்பாட்டைக்குறிப்பதைப் போல இந்து நாகரிக சின்னங்கள் கதைபேசும். அர்த்தமுள்ள இந்து நாகரிகத்தின் கதையை ஆவலோடு அறிந்து பயனடைவோம்.

இந்து நாகரிகத்தில் நம்பிக்கை கொண்டுள்ள இகேடா என்னும் யப்பானிய பிரதம மந்திரியார் 1981 ஆம் ஆண்டுக்கிடையில் உலகமெங்கும் இந்து நாகரிகம் நன்கு பரவிவிடும் என்று கூறியுள்ளார். ★

## திருக்கோயில்கள்

முற்காலத்து மன்னர்களும் செல்வர்களும் பக்தி உணர்வினால் பொதுமக்கள் உதவிகொண்டு இறைவனுக்கு எடுத்த கோயில்கள் பல கடவுள் பக்தியையும் நல்லொழுக்கத்தையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும், கலைகளையும் கோயில்கள் காத்துவந்தன. தூயதொண்டர்கள் தொண்டாற்ற உறுதி கொண்ட இடங்கள் கோயில்களேயாம். ★

★ உண்மை பேசின் உத்தமனாகலாம் ★

## சிறுவர் பகுதி



# மதமே எனக்குத் தாயாகும்

— நாக. முத்தையா

அறிவு தங்கும் நல்லவராம்
ஆற்றல் பொங்கும் வல்லவராம்
உறவு கொண்டு புவியோர்கள்
ஒத்து வாழ உழைத்தவராம்.

விவேகா னந்தர் எனும்பெயரில்
வியந்து கற்றோர் மெச்சிடவே
புவியில் பிறந்த புண்ணியனும்
புவியோர் போற்றும் மன்னனுமாம்.

கப்பல் ஏறிக் கடல்தாண்டக்
கருதி அன்னோன் ஓர்நாளில்
கப்பற் பயணம் செல்லுகையில்
கண்டார் அருகில் வெள்ளையனை.

வெள்ளை நிறத்தான் இந்தியரை
வெறிபி டித்த வார்த்தைகளால்
எள்ளி நகைத்துப் பேசினனே
இந்து மதத்தை ஏசினனே!

விவேகா னந்தர் அவனருகில்
விரைந்து சென்றே இந்தியரின்
விவேக முள்ள வாழ்க்கையினை
விளக்கத் தோடு சொல்லினரே.

இந்து மதத்தின் பெருமையினை
எடுத்தெ டுத்துப் புகன்றனரே
எந்த வழியிற் சொன்னாலும்
ஏற்க வில்லை மேனாட்டான்.

அடக்க மொழிகள் வெற்றியினை
அளிக்க வில்லை எனக்கண்டு
நடுக்கும் குரலில் எச்சரித்தார்
நடுங்கி விட்டான் வெள்ளையனும்.

இந்து மதத்தை – இந்தியரை
இனியும் இழித்துப் பேசுவையேல்
முந்தி மோதும் அலையிடையே
மூழ்க வைப்பேன்உனை என்றார்.

அக்னி பறக்கும் கண்களினை
ஆற்றல் தொனிக்கும் வார்த்தையினை
தக்க சமயம் கண்ணுற்றுத்
தளர்ந்து பயந்தான் மேனாட்டான்.

அடிக்குப் பயந்து வாய்மூடி
அமைதி கொண்ட அந்நியன்பால்
வெடிக்கும் மருந்தால் வீறுற்ற
விவேகா னந்தர் சொன்னார்காண்.

மதமே எனக்குத் தாயாகும்
மனித குலமோ ஒன்றாகும்
இதனை மறத்தல் தீதாகும்
இழித்துப் பேசின் உயிர்போகும்.

ஆதாரம்: இராமகிருஷ்ண விஜயம்

## இவ்வாறு சொன்னவர் யாவர்?

1. துன்பம் வந்தபோது அழுகிறவர்கள் அடிமைகள்.
2. அவசரப்பட்டு நட்புக்கொள்ளலாகாது.
3. நல்லதை அறிந்தும் அதைப் பின்பற்றாதவன் கோழை.
4. உளறும் நாவை அடக்குபவர் நல்ல சொற்பொழிவாளர்.
5. முட்டாள்கள் மௌனமாக இருத்தல் மிகவும் நல்லது.
6. நல்ல நூல்கள் சிந்தனை செய்யத் தூண்டுவன.
7. பதவியை விரும்புவோர் மக்களுக்காக வாழ்வதில்லை.
8. தாய்மை என்பது பெண்ணின் பிறப்புரிமை.
9. பணி புரிதல் மனிதருக்குப் பெருமை தருவது.
10. சாந்தமான பதிலே கோபத்தைத் தணிக்கும்.

(விடைகள் வேறிடத்தில்)

## மரங்கள் போதா

மரங்கள் இல்லையேல் வாழ்வு இல்லை. வீடு கட்டவும் குடிசைத் தொழில் செய்யவும் மரங்கள் தேவை. நாளாந்த வாழ்வில் பழங்கள், எண்ணெய், மருந்து, விறகு தருவதோடு படுக்கக் கட்டிலும், இருக்கக் கதிரையும், இறுதி யாத்திரையிற் பெட்டியும் தருவன மரங்கள். விவசாயத்துக்கு மரந்தரும் இயற்கைப் பசளை அதிகம்.

இவை எல்லாவற்றையும்விட நம் வாழ்விடத்து வெப்பத்தைத் தடுத்து, நல்ல நிழலைத் தந்து, நாம் சுவாசிக்கும் காற்றைச் சுத்திகரித்துத் தேவைக்கு உகந்த வகையில் சமப்படுத்தி, மண்ணின் ஈரத்தன்மையைப் பாதுகாத்து, மண்ணரிப்பைத் தடுத்து, புகலிடம் இல்லாப் பறவைகளுக்குத் தங்க இடங்கொடுத்து, ஆடு மாடு முதலிய மிருகங்களுக்கு உணவளித்து எமக்கு ஆதரவு தருகின்றன. பருவ கால மாற்றத்தின் போது பல்வேறு மரங்கள் பலவிதமாகப் பூவும் காயும் பழமும் தந்து நம்மை வாழச் செய்கின்றன. ★

## சிவனுக்கும் மயிலுக்கும் சில ஒற்றுமைகள்

அழகு, ஆடல், நீலகண்டம், நஞ்சை அடக்கல், பாம்பை அடக்கல், நடனமாடல், ஆற்றலுடைமை, ஓங்காரப் பொருளமைதல்

# நாவலர் நன்மொழிகள்

## செல்வம்



செல்வமாவது இரத்தினம், பொன், வெள்ளி, நெல், முதலாயின. தருமத்துக்கும், இன்பத்துக்கும் துணைக் காரணம் செல்வம். ஆதலினல் யாவரும் செல்வத்தை இடையரு முயற்சியோடு வருந்திச் சம்பாதித்தல் வேண்டும்.

பொருள் சம்பாதிக்குமிடத்து தருமநெறியாலே சம்பாதித்தல் வேண்டும். தரும நெறியால் வந்த பொருளே பயன்கள் எல்லாவற்றையுங் கொடுக்கும்.

## தருமம்

நல்லோரிணக்கமும் நல்லறிவுமுடையவர்கள், தங்கள் பொருளிலே தங்களுக்கும் தங்கள் பிதா மாதா முதலிய பந்துக்களுக்கும், பெண்டிர் பிள்ளைகளுக்கும் வேண்டும் வரையும் வைத்துக்கொண்டு, மற்றதைத் தங்கள் ஆன்ம சுகத்தின் பொருட்டு உத்தம தருமங்களிலே செலவு செய்வார்கள். அப்படிச் செய்கின்றவர்கள் ஆன்மசுகத்தை மாத்திரமன்றி, தற்காலத்திலும், பிற்காலத்திலும் அறிவுடையோர் வாய்ப்படும் நிலையுள்ள புகழையும் அடைவார்கள்.

## மரம் நாட்டுதல்

ஆன்மார்த்த பூசைக்கும் பரார்த்த பூசைக்கும் உபயோகமாகும் பொருட்டு, விதிப்படி திருநந்தனவனம் வைப்பித்துப் பாதுகாத்தல் வேண்டும். திருநந்தனவனத்துள்ள புஷ்பங்களைக் கடவுட் பூசையின்றிப் பிற கருமங்களிலே உபயோகித்தல் அதிபாதகம். வழிப்போக்கர்களுக்கு நிழலிடும்படி வழிகளிலே மரங்களை வைப்பித்தல் வேண்டும்.

# 1977 மே மாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 1 | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| 3 | செவ். | சித்திரா பூரணை |
| 7 | சனி | அக்கினி நாளாரம்பம் |
| 9 | திங்கள் | நடேசர் அபிஷேகம் |
| 11 | புதன் | திருநாவுக்கரசுநாயனர் குருபூசை |
| 13 | வெள்ளி | ஏகாதசி விரதம் |
| 15 | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| 17 | செவ். | அமாவாசை விரதம் |
| 18 | புதன் | கார்த்திகை விரதம் |
| 27 | வெள்ளி | வன்னிவிளாங்குளம் பொங்கல் |
| 28 | சனி | அக்கினிநாள் முடிவு |
| 29 | ஞாயிறு | ஏகாதசி விரதம் |
| 30 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 31 | செவ். | வைகாசி விசாகம் |

# சுக்கிர நீதி

## நல்லொழுக்கம்

1. அறம் இன்றி இன்பம் உண்டாகாது.
2. இறுமாப்புள்ள தோற்றம் இருக்கலாகாது.
3. நடக்கும்போது மிகு தூரப்பார்வை ஆகாது.
4. இரவில் தனிவழி போதல் ஆகாது.
5. இருகாரியங்களை ஒருநேரத்தில் பார்த்தல் ஆகாது.
6. விரைந்து வரும் பொருள்களைத் தடுத்தல் ஆகாது.
7. தீவினையை நெஞ்சால் நினைத்தலும் ஆகாது.
8. வாழ்விலும் தாழ்விலும் ஒருநிலைப் படுதல் வேண்டும்.
9. எல்லோரிடமும் நம்பிக்கையும் ஐயுறவும் ஆகா.
10. பெரியவர்களின் நிழலை மிதித்தல் ஆகாது.
11. நெருப்புக்கு நேரே செல்லல் ஆகாது.
12. மூக்கை மிகுதியாக வருத்தல் ஆகாது.
13. நிலத்தைக் காரணமின்றிக் கீறுதலாகாது.
14. இரண்டு கைகளாலும் தலையைச் சொறிதலாகாது.
15. இரவில் மரங்களினடியில் இருத்தலாகாது.

# வழிகாட்டும் தெல்லிப்பழை

தெல்லிப்பழை வாசிகள் பல சற்கருமங்களில் முன்னேடிகளாய்த் திகழ்கின்றூர்கள். அவ்வூரிலுள்ள காசி விநாயகர் ஆலயத்தின் ஒரு பாகத்தில் நடந்து வருகின்ற இசைக்கல்லூரி மற்றவர்களுக்கு வழிகாட்டுகிறது. அதற்கு நிலையானதொரு மண்டபம் மிக அருமையாகக் கட்டப்பெற்றுள்ளது. அதனை மில்க்வைற் தொழிலதிபர் 22-4-77 வெள்ளி மாலை சதுர்த்தி வேளையில் திறந்துவைத்தபோது திருவாட்டி நாகம்மா கனகராசா குத்துவிளக்கேற்றி வைத்தார். திரு. அ. சரவணமுத்து அவர்கள் தலைமையில் நிகழ்ந்த கூட்டத்தில் இந்து நாகரிகத் துறைப் பீடாதிபதி சிவஸ்ரீ கா. கயிலாசநாதக் குருக்கள் அவர்களும் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் ஆசியுரை வழங்கினூர்கள். ★

# மாணவர் செய்திட்டம்

பாடசாலை மாணவர்களைச் சேரி திருத்துதல், குளங்களை ஆழமாக்குதல், கிராமப் புனரமைப்புச் செய்தல் முதலிய செய்திட்டங்களில் ஊக்கப்படுந்து முகமாக ஒரு வழிகாட்டி போல அமைந்த ஒரு சிறுநூல் மாணவர் செய்திட்டம். மில்க்வைற் பொன் விழா 1927—1977 நினைவாக வெளியிட்ட இந்நூல் இலவசமாகக் கல்லூரிகளுக்கு வழங்கப்படும். ★

# இயற்கை வைத்தியம்

பல்வலி என்பது கல்சியக் குறைவாலும் உயிர்ச்சத்து C இன்மையாலும் உண்டாவது. பல்வலியைத் தணிக்கக் கறியுப்பை வெந்நீரிலிட்டுக் கலக்கி வாய் கொப்பளித்தலர்கும்

— பொய்யாமொழி

கல்வியில்லாத ஆன்மா பணி செய்யாத சலவைக்கல்.

— அடிஸன்

★ பொறுமை என்றும் பெருமை அளிக்கும் ★

# பன்மொழிப் புலவர் சேனாதிராயர்

இருபாலை நெல்லைநாத முதலியார் நினைவாற்றலுக்குப் பெயர் பெற்ற பெரும் புலவர். அவருக்குச் சேனாதிராயர் என்றொரு மைந்தர் இருந்தார். அவர் தமிழ், சமஸ்கிருதம்' ஆங்கிலம், ஒல்லாந்தம், போத்துக்கேயம், லத்தீன் முதலிய மொழிகளை நன்கறிந்தவர். அக்காலத்தில் பிறமொழிகள் பயிலுவதற்கு நல்ல வாய்ப்பு இருந்தது.

சேனாதிராயர் வட்டுக்கோட்டை சுவாமிநாதப் புலவரிடம் கம்பராமாயணத்தை முறையாகப் படித்தார். செட்டியார் சிவன் கோயிலில் வந்திருந்த கூழங்கைத் தம்பிரான் என்னும் கனகசபாபதி யோகியிடம் நன்னூலை நாற்பது நாள்களில் முறையாகக் கற்றார்.


பெரிய படிப்பாளியாயிருந்த சேனாதிராய முதலியார் கச்சேரியில் மொழி பெயர்ப்பாளராய் இருந்து பின் நியாயவாதியாகி பின் மணியகாரனாயும் நீதிபதியாயும் கடமையாற்றியவர். அவர் கச்சேரி உத்தியோகம் பார்த்த காலத்தில் தான் அங்கே கந்தப்பிள்ளை என்னும் ஆராய்ச்சி உத்தியோகத்தரோடு பழக்கமானார். ஆராய்ச்சி கந்தருக்கு ஆறுமுகம் என்றொரு கடைக்குட்டி மைந்தன் இருந்தார். இயற்கை விவேகியான ஆறுமுகத்தைச் சேனாதிராய முதலியாரிடம் படிக்க வைத்தனர். கூழங்கைத் தம்பிரான் கொண்டுவந்த ஞான பண்டாரம் முழுவதும் சேனாதிராய முதலியார் மூலம் கடைக்குட்டி ஆறுமுகத்தில் சுவறியது. ஆறுமுகம் இளமைக் காலத்திலேயே திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதானமவர்கள் முன் பெரிய பிரசங்கஞ் செய்து நாவலர் என்னும் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

நீதிபதி உத்தியோகம் பார்த்த பெரும் புலவரான சேனாதிராயர் புராணப் பிரசங்கத்தை மூதன் முதலாகக் கோயில்களில் ஆரம்பித்தார். சைவ சமயத்தைப் பரப்புவதற்கும் காப்பதற்கும் அது வழி எனக் கருதினர். அவர் கோயில்களுக்குப் போகும் போது பல புலவர்கள் அங்கே போவார்கள். சேனாதிராயரோடு மிக நெருங்கிப் பழகிய முதிர்ந்த புலவர் முத்துக்கவிராசசேகரம் என்னும் பெரியார். அவர் சுன்னாகத்தைச் சேர்ந்தவர்.

சேனாதிராயர் நல்லூர்க் கந்தசுவாமியார் மீது அளவு கடந்த பக்தியுள்ளவர். அவர்தம் பக்திப் பெருக்கால் நல்லைவெண்பா, நல்லையந்தாதி, நல்லைக்குறவஞ்சி முதலிய பிரபந்தங்களைப் பாடியுள்ளார். இன்னும் மாவிட்டபுரக் கந்தசுவாமியார் மீதும் பல பிரபந்தங்களைப் பாடியவருக்கு நீராவியடிப் பிள்ளையாரோடு நெருங்கிய தொடர்புண்டு. பிள்ளையார்மீது கலிவெண்பா முதலிய பல பாடல்கள் பாடியுள்ளார். சேனாதிராய முதலியாருக்கு இராமலிங்கம் என்றொரு மைந்தர் இருந்தார். இவரும் தந்தையார் போன்ற மதிநுட்பமும் கல்வியறிவும் உள்ளவர் என்பர். ★

## இவ்வாறு சொன்னவர் யாவர்? விடைகள்.

1. காந்தியடிகள் 2. சோக்கிரட்டீஸ் 3. சிங்செள
4. காந்தியடிகள் 5. பெர்னாட்ஷோ 6. சாள்ஸ்லாம்
7. காந்தியடிகள் 8. காண்டேகர் 9. அடிசன் 10. சிங்செள



# யோகசுவாமிகள் அருள்மொழிகள்

1. தன்னைத் திருத்த அதிகம் படிக்கத் தேவையில்லை.
2. மனச்சாட்சியின்படி நடத்தல் வேண்டும்.
3. தன்னைத் தன்னால் அறிந்தால்தான் திருப்தி.
4. மனமே கூடிய நண்பனும் கொடிய பகைவனும்.
5. எல்லாச் சமயங்களின் மூல உண்மை ஒன்றே.
6. இவ்வுலகம் எங்களுக்கு ஒரு பள்ளிக்கூடம்.
7. சும்மா இருத்தல் பெரிய தேகாப்பியாசம்.
8. சிவத்தியானத்தால் மனவடக்கம் உண்டாகும்.
9. ஒரே கடவுள், ஒரே சமயம், ஒரே ஆட்கள்.
10. உள்ளே ஆழமாகச் செல்லல் வேண்டும்.
11. கண்ணிற் கலந்து கடவுள் பார்க்கிறார்.
12. நான் செத்தால் நீ நல்லாய் இருப்பாய்.
13. தன்னை அறிந்தால் புறத்தி இல்லை.
14. மனிதன் மரணத்துக்கு அப்பாற்பட்டவன்.
15. மோனத்திலிருந்து அசரீரி வாக்குகள் வரும்.

# இளஞ்சமுதாயம்


எங்கள் பிரதேசத்திலுள்ள இளஞ்சமுதாயத்தினர் இற்றைக்குச் சிலகாலம் முதலாகச் செய்துவருகின்ற செயல் திட்டங்கள் தலையாயவை, போற்றுதற்குரியவை. வருங் காலத்தில் நாட்டைப் போற்றுங் கடமையும் இவர்களுடையதேயாம். வீரர், புலவர், ஞானியர், தலைவர், உழைப்பாளிகள், உருவாக்குவோர், திட்டமிடுவோர், செயல் புரிவோர், பயன் காணுவோர் எல்லாம் இவர்கள்தாமே.

எனவே இளைஞர்களும் யுவதிகளும் தமக்கு வேண்டிய பயிற்சிகளைப் பெறுவதற்குத் தம்மைத் தயார் செய்து கொள்ளுதல் இவர்கள் தலையாய கடனாகும். நேர்மை, அறிவு, உறுதி, நல்லொழுக்கம், கட்டுப்பாடு, தலைமை தாங்குதல், கீழ்ப்படிதல், கண்ணியம், அன்பு, ஈகை, சமாதான சகவாழ்வு முதலிய நற்குணங்களை இவர்கள் பழகுதல் வேண்டும். எதனையும் ஆராய்ந்து அறியும் இயல்பும், நீதிக்கு விட்டுக் கொடுக்கும் சுபாவமும், பக்கத்தைப் பார்த்தொழுகும் பண்பாடும் உள்ளவராதல் வேண்டும். மொழிப்பற்று, சமயப்பற்று, நாட்டுப்பற்று, இறைவிசுவாசம் உள்ளவராதல் வேண்டும். புதிய சக்தியும், நிறைந்த உணர்வும், சிறந்த ஊக்கமும் உளளது இளமைப் பருவம். இளமை ஆற்றலை நல்வழியில் திருத்தி நல்வாழ்வுக்கு வழி அமைக்க வாழ்த்துகிறோம். ★

பொய்யும் சூதும் முளைக்காத தேசமில்லை. இது முளைக்க எல்லா சீதோஷ்ணங்களும் உதவி செய்யும்.

— அடிசன்

★ இன்சொல் என்றும் பொன்சொரி மருந்து ★



★

## அரைகுறையான வேதாந்த ஞானம்

★

உலகத்திலுள்ள பொருள்கள் யாவும் ஈசுவர சொரூபங்களே என்று பெரியகுரு தம்முடைய சீடர்களுக்கு உபதேசித்தார். ஒரு சிஷ்யன் இதன் உண்மையான கருத்தைத் தெரிந்து தெளிந்து கொள்ளாமல சொல்லர்த்தத்தை மாத்திரம் அறிந்துகொண்டான்.

ஒருநாள் அவன் ஒரு வழியால் போய்க்கொண்டிருந்தபோது எதிரே வந்த ஒரு யானையைக் கண்டான். யானையின் மீதிருந்த பாகன் ''விலகு விலகு'' என்று கூவிக் கொண்டிருந்தான். நான் ஏன் விலகவேண்டும் நானும் ஈசுவரன், இந்த யானையும் ஈசுவரன். ஈசுவரன் ஈசுவரனுக்கு ஏன் பயப்படவேண்டும் என்று நினைத்துக்கொண்டு அவன் விலகாமல் சென்றான். அவனைச் சமீபித்த யானை அவனைத் தும்பிக்கையால் தூக்கி அப்பால் எறிந்துவிட்டுச் சென்றது

அதனால் உண்டான காயங்களுடன் அவன் குருவிடஞ் சென்றான். தனக்கு நிகழ்ந்ததைக் கூறி வருந்தினான். அவன் சொன்னவற்றைக் கேட்ட குரு ''எல்லாம் சரிதான், நீயும் ஈசுவரன் அந்த யானையும் ஈசுவரன், ஆனால் மேலே இருந்த பாகனாகிய ஈசுவரன் எச்சரித்ததை நீ கவனிக்க வில்லையே'' என்றார். ★

## வழக்கிலுள்ள வடமொழிகள் சில

| | |
|---|---|
| கங்காசுதன் | முருகன், வீடுமன் |
| கங்காதரன் | சிவன் |
| கங்காதேவி | நீர்மகள் |
| கங்காளம் | எலும்புக்கோவை |
| கங்காளன் | சிவன் |
| கக்ஷி | பக்கம் |
| கஷாயம் | மருந்துக்குடிநீர் |
| கஜானனன் | பிள்ளையார், யானைமுகன் |
| கஞ்சுகம் | சட்டை |
| கடகம் | வளையல் |
| கடம் | குடம் |
| கடம்பன் | முருகன் |
| கடாக்ஷம் | அருள் |
| கடிகாரம் | மணிக்கூடு |
| கடினம் | வன்மை |
| கடு | நஞ்சு |
| கடூரம் | கொடுமை |
| கஷ்டம் | துன்பம் |
| கணநாதர் | பிள்ளையார் |
| கணபதி | பிள்ளையார் |

## இளைஞர்களைக் காப்போம்

கல்லூரி அதிபர் ஒருவர் உயர்பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்குப் போனார். அதிகாரிகள் அவரிடம் இதைப் பற்றி என்ன நினைக்கிறீர் என்று ஒரு அறிக்கையைக் காட்டினார்கள். உதைப்பற்றிய அக்கறை எனக்கில்லை என்றார் அதிபர். அப்படியானால் உமக்கு எதில் அக்கறை என்று அதிகாரிகள் கேட்டார்கள். எனக்கு இளைஞர்களை மனிதராக்குவதில்தான் அக்கறை என்றார் அதிபர்.

அறிவாளி ஒருவர் பட்டப்பகலில் வெளிச்சத்தைக் கையிற் கொண்டு வீதி வழியே போவார் வருவாரின் முகத்தைப் பார்த்துச் சென்றார். யார் இந்தப் பைத்தியம்? இது என்ன செய்கிறது என்று ஒருவர் சிறினார். இல்லை இல்லை. யாரேனும் மனிதர் போகிறாரா என்றுதான் பார்க்கிறேன் என்றார் விளக்கேந்திய விவேகி. மாணவரை மனிதராக்குவதையே பெற்றோரும் ஆசிரியரும் சமுதாயமும் அரசும் கருத்தாகக் கொள்ளுதல் வேண்டும். பிள்ளைகளின் மனத்தை முறித்து அவர்கள் சிந்தனையை நோவச் செய்தால் அவர்களிடமே மனிதத் தன்மை நல்ல முறையில் உண்டாகமாட்டாது. மனிதன் என்றால் சிந்திப்பவன் என்பதே கருத்து.

பிள்ளைகள் நல்ல முறையில் வாழ்ந்து சிந்தித்துத் தொழிற்படுதல் எல்லோருக்கும் பெரும்பயன் தருவதாகும். மாணவர்தம் சிந்தனைக்கு ஒரு புதுக்கவி உதவுவதாக. ★

## சிந்திக்க வேண்டும் செய்யுள்

(வை. குமரவேல் - அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

கால் போன போக்கினிலே போக லாமா
கண்டபடி ஊர்சுற்றித் திரிய லாமா
வால் போன மனிதஇனம் மீண்டும் வந்து
வானரத்தின் செய்கைகளைச் செய்ய லாமா
நூலொன்றைப் படித்துநல் லறிவைப் பெற்று
நுண்ணறிவைப் பாழ்படுத்தி வாழ லாமா
சால் போன்ற அறிவுடைய இளமை யோரே
சிந்தித்துப் பாருங்கள் செயற் படுங்கள்.

## ஆன்ம விசார அருள் வாக்கியங்கள்

1. அடக்கம் உள்ளவரை எவரும் விரும்புவர்.
2. பிற உயிர்களைத் தானாகக் கருதி நடத்தல் அருள்.
3. பிற உயிர்களை வேறாகக் கருதி நடத்தல் பொறாமை.
4. பசித்தவனுக்கு உணவூட்டல் நிலத்தை அறிந்து விதைத்தல் போலாகும்.
5. பிறர் தீங்கு செய்தால் இறைவனிடம் முறையிடுதல் முறை.
6. நீதிகளைக் காட்டிலும் அநுபவமே சிறந்தது.
7. அத்தியந்த அன்பும் மேலான ஞானமும் ஒன்றே.
8. இறையன்பினால் உலகத்தை மறப்பவன் சந்நியாசி.
9. பிறர் குற்றத்தைப் பொறுத்தால் உனது அஞ்ஞானம் மறையும்.

★ அறிவைப்போன்ற செல்வம் இல்லை ★

********************

## ★ விவசாய வாழ்வு ★

********************

மண் என்றும் மலடாவதில்லை. ஒன்றுக்கும் உதவாத மண் என்று சொல்லப்பட்ட இஸ்ரேல் நாட்டில் பழ வகைகள் சொரிகின்றன. பழமரங்கள் பலன் தரத் தொடங்கியதால் பணம் திரண்டது.

யாழ்ப்பாணத்தில் முந்திரிகை இவ்வளவு தூரம் பயன் தரும், பணந்தரும் என்று எம் முன்னவர் எதிர்பார்க்கவில்லை. மத்தியதரைக் கடற்கரைச் சுவாத்தியம்தான் பழ மரங்களுக்கு ஏற்றது என்று கட்டுப்பாடு இல்லை. யாழ்ப்பாணத்தில் தோடை நல்ல பயன்தருகிறது. தேனிலும் இனிய பழங்கள் வன்னிப்பகுதியிலும் உண்டாகின்றன.

கிராமங்களில் சுகவாழ்வு கிடைக்கிறது. இப்போது கிராமமெங்கும் மின்சாரம், போக்குவரத்து வசதிகள், பாடசாலை, வைத்திய வசதிகள், சந்தை வசதிகள் யாவும் உள்ளன. அங்கே வசதியான நிலங்கள் உண்டு. தேடுவாரற்றுக் கிடக்கும் நிலங்களைத் திருத்திப் பொன்விளையச் செய்யலாம். கிராமப் பொருளாதாரம் நிலையானது, நீடித்தகாலம் பயன்தருவது.

தேடுவாரற்ற நிலங்களில் பருத்தியைப் பயிரிட்டுப் பயன்பெறலாம். பெரிய பஞ்சாலைகளுக்கு விநியோகஞ் செய்யாவிட்டாலும் குடிசைத்தொழில் மூலம் நெசவு செய்பவருக்கு நாம் பஞ்சினை உற்பத்தி செய்துகொள்ளலாம்.

### பாற்பண்ணை


பாற்பண்ணை அமைப்பதற்குக் கிராமப் புறங்களே மிகவும் வசதியானவை. எல்லோரும் பயிர்களை விளைவிக்கும் போது ஒரு சிலர் பாற் பண்ணைகளைப் பரிபாலிக்கலாம். நல்ல இனத்துப் பசுக்களை வளர்த்து ஊருக்குத் தேவையான பாலை விநியோகஞ் செய்யலாம். இயற்கைப் பசளையான எருவுக்கு நூறுமைல் தூரம் போய் குளத்து மண்ணுக்கு அதிக பணங்கொடுத்து வாங்கத் தேவையில்லை.

## இரட்டைகள்

| | |
|---|---|
| தீங்கும் நலமும் | விதியும் விலக்கும் |
| அழிவும் ஆக்கமும் | தாழ்வும் உயர்வும் |
| மறப்பும் நினைப்பும் | இறப்பும் பிறப்பும் |
| இருளும் ஒளியும் | வலிவும் மெலிவும் |
| பகையும் நட்பும் | சிறிதும் பெரிதும் |
| துன்பமும் இன்பமும் | சோம்பலும் முயற்சியும் |
| மருளும் அருளும் | வெறுப்பும் விருப்பும் |

நன்றியறிதலைப் போல இன்பகரமான மனோதர்மம் வேறொன்றுமில்லை. மற்ற அறங்களை அனுஷ்டிப்பதில் பல தொல்லைகள் உண்டு. இதிலோ அணுவளவு துன்பங்கூட கிடையாது.

— அடிஸன்



## சிவானந்தர் வழியில் சிதானந்தர்

சாந்தி வெளியிலிருந்து கிடைக்கக்கூடிய பொருளல்ல. எதுவரைக்கும் நாம் அதை வெளியில் தேடிக்கொண்டிருக்கிறோமோ அதுவரைக்கும் சுற்றி அலைகிறோம். நாம் உள்முகமாக நாமே தேடும்பொழுது மெதுவாகச் சரியான திசையைநோக்கி முன்னேறத் தொடங்குகிறோம். நமக்குப் படிப்படியாகச் சாந்தி கிடைக்கத் தொடங்குகிறது. இதற்கு வரையறுக்கப்பட்ட தொடர்ச்சியான அப்பியாசம் தேவைப்படுகிறது. ★

## தொகை விளக்கம்

ஒன்றுமுதல் நூறுவரையுள்ள இலக்கங்கள் யாவும் ஒவ்வொருவகையில் ஏற்றம் உள்ளவை. அவற்றின் எண்ணிக்கையில் எத்தனையோ விதமான தொகைப் பொருள்கள் அடங்கியுள்ளன. அவை அகராதி முறையில் அடங்கியிருப்பதோடு, அர்த்தமுள்ளனவாயும் உள்ளன.

### ஒன்று

1. ஒன்றவன்தானே.
2. தெய்வம் ஒன்றே.
3. ஒன்றென்றது ஒன்றேகாண்.
4. உலகுக்கொருவனாய்.
5. தொல்லை முதல்தான் ஒன்று.

(இவைபோல் இன்னும் பலவுள.)

### இரண்டு

| | | |
|---|---|---|
| 1. | அறம் | இல்லறம், துறவறம். |
| 2. | இருமை | இம்மை, மறுமை. |
| 3. | வினை | நல்வினை, தீவினை. |
| 4. | உலகம் | சித்து, அசித்து. |
| 5. | தோற்றம் | சரம், அசரம். |
| 6. | உவா | அமாவாசை, பௌர்ணிமை. |

(தொடரும்)


### செல்வத்தை விரும்பும் மனிதர் ஒழிக்க வேண்டியவை

துயில், மனத்தளர்ச்சி, அச்சம், சினம், மடிமை, காலந்தாழ்த்தல்.

### யாரவள்? அவளா?

பனைஓலைச் சுவடி

★ சேவை புரியத் தேவை நிறையும் ★




சத்தியம், அஹிம்சை, சகோதரத்துவம் ஆகிய முப்பெரு நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்துவந்த காந்தியடிகளுக்குத் தென்னாபிரிக்க வாழ்வு புடம் போட்டது போல இருந்தது. ஒருசமயம் அங்கே ஊரடங்குச்சட்டம் மாலைநேரங்களில் நடைமுறைக்கு வந்தது. அப்போது இந்தியர் வெளியே நடக்கக்கூடாது என்பது சட்டம். ஒருநாள் மாலை காந்தியடிகள் வெளியே நடந்து சென்றுகொண்டிருக்கையில் திடீரென ஊரடங்குச்சட்டம் தெரிவிக்கப்பட்டது.

ஒரு வீட்டு வாசல் காப்போன் காந்தியடிகளைத் தள்ளிவிட்டு வாயில் வந்தபடி திட்டினான். அச்சமயம் அங்கே வந்த ஐரோப்பியன் ஒருவர், காந்தியடிகளிடம் ''நீங்கள் வழக்குத் தொடருங்கள், நான் சாட்சி சொல்லுகிறேன்'' என்றார் பரிவுடன். ஆனால் காந்தியடிகள் அவரைப்பார்த்து, ''பாபம் இவனுக்கு இந்தியரும் நீக்குரோவரும் ஒன்றாய்ப் படுகிறது. மேலும் இதைப்போலவே நீக்குரோச் சகோதரனையும் நடத்துவான். என் சொந்த விஷயங்களுக்காக நீதிமன்றங்களுக்குச் செல்வதில்லை என்று விரதம் பூண்டிருக்கிறேன்'' என்று அமைதியாகப் பதில் கூறினார். ★

## பொன்னாங்காணி

பொன்னாங்காணி பெயர் பெற்ற மருந்துப் பூடாகவும், உயிர்ச்சத்துள்ள கீரை வகையாகவும் நன்மை செய்கிறது. பொன்னாங்காணிக்குப் புளியிட்டுக் கடைந்தால், உண்ணாக்கெல்லாம் தித்திக்கும் என்பது பாடல். பொன்னாங்காணி மலையடிவாரங்களிலும், வயல் வரம்புகளிலும், நீரோட்டமுள்ள இடங்களிலும் அடர்த்தியாகப் படரும் மெல்லிய கொடி. பொன்னாங்காணிக்குச் சானகி, சிதப்பூரம், சீதை, சோமவல்லரி, தியாக்கிரை, பித்தசாந்தி, மச்சியாச்சி முதலிய பெயர்களும் உண்டு, இன்னும் கண்ணுக்கினியான் என்றும் இதைக் கூறுவர்.

கண்ணுக்கினியான் எனப் பெயர் பெற்றதால் இது உண்பவர் தம் கண்பார்வையைத் துலக்கமாக்கும் என்றும், கண்ணுக்கு குளிர்மை தந்து வலுப்படுத்தும் என்றும் கூறுவர். இது உடம்பிலுள்ள பாசாணங்களை நீக்கவல்லது என்றும், காயகற்ப மூலிகை என்றும் பெயர் பெற்றது. இதிலுள்ள பொன் சத்து அதிகமாதலால் உண்பவர்தம் உடம்புக்குக் காந்தசக்தி என்னும் ஒளியையும் ஊட்டும்; காசம், புகைச்சல், கருவிழிநோய், வாதம், அனல் முதலியவற்றுக்குப் பொன்னாங்காணிக் கொடியைப் போற்று என்றொரு பாடல் வழக்கிலுள்ளது.

பொன்+ஆம்+காண்+நீ என்று இதன் பெயரைப் பிரித்துப் பொருள் சொல்லுமளவில் இது போற்றப் பெறுகிறது. இதை எவ்விதமாயும் உட்கொள்ளலாம், ஆனால் புளி விடுவதால் இதன் இயல்பு குன்றும் என்பர். மிளகாய்க்குப் பதிலாக மிளகு சேர்த்துச் சமைத்தல் மிக்க பயன் தருவதாகும்.

பொன்னாங்காணிச் சமூலத்தைக் காலையில் வாய்கொண்ட மட்டும் சப்பித் தின்று வந்தால் நாற்பது நாளில் நன்மை தெரியும். உடம்பு குளிர்ந்து, கண் குளிர்ந்து பகலில் நட்சத்திரம் பார்க்கக் கூடியதாக இருக்கும். ★

## ஒன்றுதான் கற்கவில்லை

பறவைகளைப்போல் காற்றிலே பறக்கக் கற்றுக்கொண்டோம். மீனைப்போல் நீருக்கடியில் நீந்தக் கற்றுக்கொண்டோம். ஆனால் மனிதர்களாக மண்ணில் நடந்துகொள்ள இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. ★



## சிவானந்த சீலம்

1. தூய்மையுடன் இரு. நேர்மையாய் வாழ்.
2. ஏழைகளுக்கு இரங்கு. அவர்களுடன் பழகு.
3. ஆடம்பரத்தை விடு. வேற்றுமையை மற.
4. கடுஞ் சொல் நீக்கு. கண்ணியமாய் வாழ்.
5. எவரையும் கேலி செய்யாதே. சீறி விழாதே.
6. மமதையை விடு. மகிழ்ச்சியோடு வாழ்.
7. அறவோரைச் சேர்ந்திரு. ஆராய்ந்து அறி.
8. அறிவைப் பயன்படுத்து. ஆன்ம விசாரஞ்செய்.
9. தெய்வத்தைத் தொழு. தெய்விகமாய் வாழ்.

கோபத்தை அன்பினாலும், ஆசைகளைத் தூய்மையினாலும், பேராசையைத் தாராள மனப்பான்மையாலும், கர்வத்தைப் பணிவாலும், அகங்காரத்தை இறைபக்தியாலும் வெற்றி கொள்ளலாம். இவற்றை வென்றவரிடம் இறைமை மிளிரும்.

**மில்க்வைற் செய்தி - 17**
பெற விரும்புவோர்
மெடிக்கேட்டட் அல்லது நீம்
வாசனை சோப் அல்லது பார் சோப் 2 மேலுறைகள்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.


அனுபவந்தான் அருமையான பள்ளிக்கூடம். ஆனால் முட்டாள்கள் அதில் கற்றுக்கொள்வது அபூர்வம். அவர்கள் வேறெதிலுமே அவர்களாக கற்றுத் தெரியமாட்டார்கள். உண்மை என்னவெனில் நாம் அவர்களுக்கு ஆலோசனை கூறலாம். அவர்களுக்கு நன்நடத்தை தர இயலாது.
— பிராங்ளின்

★ நல்லினஞ் சேர்ந்தால் நன்மை பெறலாம் ★

# மாதர் பகுதி

வீட்டுக்கு லட்சுமியாய் விளங்குபவள் கிருகலட்சுமி. அவள் கணவனுக்கு வாழ்வளிக்கவந்த வாழ்க்கைத்துணை. அவளே வீட்டுக்குரியவளாதலால் இல்லாள். அவள் கணவனின் உரிமையாதலால் மனைவி அவள் மனைக்குரியவள். கணவனிடம் அன்பும், நேசமும் கொண்ட பாரியாள். அவளைப் பிரியை, காதலி என்று கணவன் கொண்டாடுகிறான். அவள் குடும்பத்தை நிர்வாகஞ் செய்பவளாதலால் குடும்பினி. அவள் குடும்ப பாரத்தை தாங்குபவளாதலால் பாரி. வீட்டுக்கு முதல்வியாதலால் நாயகி, தலைவி.

## யோகாசனங்கள்



யோகாசனங்கள் பல. அவை யாவற்றையும் ஒரே முறையில் செய்ய வேண்டும் என்பதில்லை. ஆரம்பிக்கும் சாதகர்கள் படிப்படியாக ஆசனங்களை அதிகரிக்கலாம். யோகத்துறையில் பத்மாசனம், தனுராசனம், பஸ்சிமோத்தானசனம், ஹலாசனம், மயூராசனம், சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், யோகமுத்ரா, சிரசாசனம், உட்டியானா, சலபாசனம், சாந்தி முதலிய பலவிதமான ஆசனங்கள் படிப்படியாக விதிக்கப்பட்டுள்ளன. இன்ன ஆசனங்களால் இன்ன நன்மையுண்டாகும் என்றும் இன்ன குறைபாடுகள் நோய்கள் நீங்கும் என்றும் அநுபவத்திற் கண்டறியலாம். எல்லாவற்றுக்கும் மேலாக யோகாசனங்கள் சாதகரை உள் நோக்கச் செய்து நல்வழியில் திசைதிருப்பிவிடும். அவர் மாந்தருள் தெய்வமாக வாழலாம். அவர் முகத்திலும், உடலிலும் ஒளியுண்டாகும். உள்ளத்திலும் ஒளியுண்டாகும். அதனால் வாக்கிலும் ஒளியுண்டாகும். நற்சிந்தனை, நற்காட்சி தோன்றும் அவர் பிறரை வாழ்விக்கும் பெரியாராவர். ★

## சுக்கிர நீதியில் மரங்களை உண்டாக்கி வளர்க்கும் முறை

அரசன் கிராமங்களில் அவற்றிற்குரியனவும், வனங்களில் அவற்றிற்குரியனவும் ஆகிய மரங்களை வைத்து வளர்த்தல் வேண்டும். அவற்றுள் தலையாய மரங்களுக்கு இருபது முழ அளவும், இடையாய மரங்களுக்குப் பதினைந்து முழ அளவும், கடையாய மரங்களுக்குப் பத்து முழ அளவும், மிகச்சிறிய மரங்களுக்கு ஐந்து முழ அளவும் உள்ள நிலங்களை இடைவெளியாக விட்டுவைத்தல் வேண்டும். அம்மரங்களை வெள்ளாடு, செம்மறியாடு, பசு ஆகிய இவற்றின் எருக்களையிட்டும், நீர் பாய்ச்சியும் வளர்த்தல் வேண்டும்.

அத்தி, அரசு, ஆல், புளிமா, சந்தனம், எலுமிச்சை, வெண்கடம்பு, அசோகம், மகிழ், வில்வம், விளா, மா, புன்னை, பூவரசு, புளி, சண்பகம், மாதுளை, வேம்பு, இலந்தை, நாரத்தை, பாலை, நெல்லி, கமுகு, தெங்கு, வாழை முதலிய நல்ல பழங்களையும் நறுமணங் கமழும் மலர்களையுமுடைய மரங்களைக் கிராமங்களின் அணிமையில் வைத்து வளர்த்தல் வேண்டும்.

வாழும் இல்லத்தின் இடப்புறத்தில் அழகிய ஆடற் பூஞ்சோலையமைத்தல் வேண்டும். அச்சோலைக்கண்ணுள்ள மரஞ்செடிகளுக்கு முதுவேனிற் காலத்தில் காலை, மாலைகளிலும், பனிக்காலத்தில் ஒவ்வொரு நாள் இடைவிட்டும், இளவேனிற் காலத்திற் பகலில் ஐந்தாம் முகூர்த்தமாய பத்து நாழிகைக்குள்ளும் நீர்விடல் வேண்டும். மழைக் காலத்தில் ஒரு பொழுதும் நீர்விடலாகாது.

(தொடர்ச்சி மறுபக்கம்)

## அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

1. நல்லதை நாடுவதன் மூலம் தீயதைத் தடுக்கலாம்.
2. சான்றோரைச் சார்ந்து தான் சான்றோன் ஆகலாம்.
3. அசுர குணங்களைப் போக்க மதங்கள் உதவுகின்றன.
4. மதத்தைப் பின்பற்றியே மன்னுயிர்க்குப் பயன் பட்டனர்.
5. நேர்மையும் சிரத்தையும் உள்ளவர்கள் ஞானத்தை அடைவர்.
6. செய்கின்ற கருமம் எதுவும் வீண் போவதில்லை.
7. பந்தங்கள் வளர வளரத் துன்பங்கள் அதிகரிக்கும்.
8. பற்றற்ற கடமை செய்வதால் சித்த சுத்தி உண்டாகும்.
9. துறவும் தூய்மையும் நல்ல இயல்புகளாகும்.
10. நடுநிலைமையில் தவறுதவன் சிறந்த கர்மயோகி.



## மறைந்த தலைவருக்கு அஞ்சலி செய்கிறோம்.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

**சுக்கிரநீதியில்........**

### காட்டுமரங்களை உண்டாக்கும் முறை

கருங்காலி, மலையத்தி, தேக்கு, கோங்கு, பெருவாகை, ஆச்சா, வெட்பாலை, மருது, புரசு, ஏழிலைப்பாலை, வன்னி, நந்தி, தேவதாரு, நரிமுருக்கு, பெருங்களா, காஞ்சிரை, கருவேல், ஆத்தி, குமிழ், மரமஞ்சள், முள்ளிலவு, மருதோன்றி, நாவேலம், பெருமரம், இலுப்பை முதலிய மரங்களும், வேறுபடர் செடிகளும் கொடிகளும் செடிகளும் ஆகிய இவற்றுள் கிராமத்தில் இருத்தற்குரியவற்றைக் கிராமத்திலும், காட்டிலிருத்தற்குரியவற்றைக் காட்டிலும் வைத்து முயன்று வளர்த்து வருதல் வேண்டும்.

### மரங்களைப் பயன் விளைக்கச் செய்யும் முறை

மரங்கள் பயன்தராதொழியின் கொள்ளு, உழுந்து, பயறு, யவம், எள்ளு, ஆகிய இத்தானியங்களில் ஒன்றை நீர்விட்டுக் காய்ச்சி ஆறவைத்து, அந்நீர் குளிர்ந்தபின் அதனால் அம்மரங்களை நனைத்தல் வேண்டும். அங்ஙனம் நனைத்தபின் அம்மலர்கள் மலர், பழம் முதலிய பயன்களை எப்பொழுதுந் தருவனவாம். ★

## மரங்களை வணங்கவேண்டும்

அழுக்காறு முதலிய தீய குணங்கள் இல்லாத முனிவர்களை வணங்குதல் போல ஒருவர் தாவரங்களை வணங்க வேண்டும். ஏனெனில் அவை தம்மை அழிக்க முயல்கின்றவர்களுக்கும் மலர்களையும் கனிகளையும் நிழலையும் வழங்குகின்றன.

— அக்கினி புராணம்

மரங்களை அழித்தல் தேசத் துரோகமாகும்.

— மநுதர்மம்

நிழலையும், பழங்களையும் தரும் மரங்களைப் பாதை ஓரங்களில் வைப்பதும், தோட்டங்களை உண்டாக்கி அவற்றைப் பொது உடைமையாகச் செய்வதும் சிறந்த தருமமாகும்.

— பாரததர்மம்

வேம்பும் அரசும் சேர்ந்தாற் போல வளர்ந்துள்ள இடத்தைச் சோமவாரத்து அமாவாசையன்று 108 முறை வலம் வருதல் பெரிய பலனைக் கொடுக்கும்.

— பாரததர்மம்

பூமரங்கள் செடிகள் கொடிகள் உள்ள சிங்காரத் தோட்டத்தை ''பாக்'' என்று கூறுகிறோம். முற்காலத்தில் இலவந்திகை, உய்யானம், கவேரவனம், சம்பாதிவனம், உபவனம் யாவும் சிங்காரத் தோட்டங்களாகும்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## மில்க்வைற் மேலுறைகள்

மில்க்வைற் சவர்க்கார மேலுறைகள் காசுத் தாள்கள் போலப் பெறுமதியானவை. அவற்றைச் சேகரித்துக் கொடுத்து அரிய நூல்கள், மில்க்வைற் செய்திகள், பைகள், துவாய்கள், பொம்மைகளை இலவசமாகப் பெறலாம். நீங்கள் மில்க்வைற் தயாரிப்புகளுக்குக் கொடுக்கும் பணத்துக்கு இரட்டிப்பு இலாபம். மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்து அனுப்புங்கள்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★


ஆரோக்கியம் தரும்
சுத்தமான வேப்பெண்ணெயிற் செய்த




நீம் வாசனை சோப்

உடம்பின் அழுக்கை நீக்கிச்
சருமத்தைப் பாதுகாத்துச்
சுகந்த மணத்தைத் தருவது.


யாழ்ப்பாணம், சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர்: ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம். 1-5-77.